A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

## முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்

**மேல்முறையீட்டு மனு எண் 82 / 2021**

திரு. இரா. தம்பி தேவேந்திரன்,
த/பெ. இராதாகிருஷ்ணன்,
அண்ணா நகர், பைங்காட்டூர்,
மன்னார்குடி – 614717.

………மேல்முறையீட்டாளர்
(திரு. இரா. தம்பி தேவேந்திரன்
திரு. R.J. ரத்னாகுமார், வழக்கறிஞர்)

எதிர்

இள மின் பொறியாளர்/ இ.கா./நகர் 2/மன்னார்குடி,
திருவாரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டவுன் 51, சன்ஜீவி தெரு,
மன்னார்குடி – 614 001.

...... எதிர்மனுதாரர்
(திரு S. குமார், உதவி பொறியாளர்/110KV SS/மன்னார்குடி)

**மனு பெறப்பட்ட நாள்: 25-10-2021**

**கேட்புரை நாள்: 15-12-2021**

**ஆணை நாள்: 15-03-2022**

25.10.2021 அன்று பெறப்பட்ட திரு. இரா. தம்பி தேவேந்திரன், த/பெ. இராதாகிருஷ்ணன், அண்ணா நகர், பைங்காட்டூர், மன்னார்குடி – 614717 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 82/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 15.12.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையிட்டாளரின் நீண்ட கால பயன்பாட்டில் இருந்த மின் இணைப்பு 583-015-56, 432, 433, 435 ஆகியவைகளுக்கு உண்டான மின் மீட்டர்களை பொருத்தி உடனடியாக மின் இணைப்பை திரும்ப தரவேண்டும் எனவும், போலி ஆவணங்களை உருவாக்கி மின்துறை அதிகாரிகளை பயன்படுத்தி தன் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிக்கும் மாணிக்கவாசகம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பை உடனடியாக துண்டிக்க வேண்டும் எனவும், காணாமல் போன மின் மீட்டர்கள் சம்மந்தமாக மின்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 புல எண் 3580-இல் 9200 ச.அ. மனைக்கு முறைப்படி மின் கட்டணம் செலுத்தப்பட்டு வருவதாகவும், திரு ராஜதுரை என்பவர் மின் அளவிகளை சேதப்படுத்திவிட்டு புதிய மின் இணைப்பு பெற முயற்சிப்பதாகவும், இது சம்மந்தமாக இள மின்பொறியாளர்/மன்னார்குடி அவர்களிடம் மனு அளிக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 புதிய மின் இணைப்பு வேண்டி திரு. N.மாணிக்கவாசம் விண்ணப்பம் பதிவு செய்து தொகை செலுத்தியுள்ளதாகவும், மேற்படி இடத்திற்கு மின் இணைப்பு வழங்க ஆட்சேபணை தெரிவித்த போது மேற்கண்ட இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்தம் என்பதற்கு உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு இள மின்பொறியாளர்/ மன்னார்குடி அவர்களிடமிருந்து கடிதம் கிடைக்கப்பெற்றதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.3 இது குறித்து மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்மன்றம், திருவாரூர் மின்பகிர்மான வட்டத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருவாரூர் மின்பகிர்மான வட்டம் 18.08.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

திருவாரூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 18.08.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"**<u>மன்றத்தின் தீர்வு</u>**:

*மனுதாரர் திரு.தம்பி தேவேந்திரன் அவர்கள் தன் பெயருக்கு உயில் எழுதி வைத்த திரு.சிவானந்தம் அவர்கள் பெயரில் இருந்த மின் இணைப்புடன் (583-015-56, 583-015-432, 583-015-433, 583-015-435) நான்கையும் தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட விண்ணப்பம் அளித்த நிலையில் அவ்விடத்தில் மின் நுகர்வோர்/அனுபவிப்பவர்கள் பொறுப்பில் இருந்த மின் மீட்டர்கள் காணவில்லை என்றும் பெயர் மாற்றத்திற்குண்டான உரிய ஆவணங்கள் திரு. தம்பி தேவேந்திரன் செலுத்தாததினாலும் மின் இணைப்புகள் இருந்த இடம் காலிமனையாக இருப்பதாலும் மேலும் அவ்விடத்தில் மன்னார்குடி உட்கோட்ட நிர்வாக நீதிபதி மற்றும் வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் ந.க.986/2019/அ.3 நாள் 11/2/2021 ஆணையின்படி மேற்படி தாவா சொத்தில் திரு.தம்பி தேவேந்திரன் மற்றும் வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் நுழையவோ, ஆக்கிரமிக்கவோ கூடாது என்ற அடிப்படையில் மேற்படி மின் இணைப்புகள் பெயர் மாற்றம் செய்ய இயலாது என்ற உரிமம்தாரருடைய வாதத்தை இம்மன்றம் ஏற்றுக் கொள்கிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 15.12.2021 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. இரா. தம்பிதேவேந்திரன் மற்றும் திரு. R.J. ரத்னாகுமார், வழக்கறிஞர் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.3 எதிர்மனுதாரர் திரு S. குமார், உதவி பொறியாளர்/110KV SS/மன்னார்குடி, திருவாரூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட முகவரியில் வசித்து வருவதாகவும், மன்னார்குடி நகரம், வார்டு எண்.1 பிளாக் எண்.56 புல எண்.3580-இல் 9200 ச.அ.மனை தன் சித்தப்பா G. சிவானந்தம் எழுதிவைத்த உயிலின் அடிப்படையில் அவர் 4.11.2016 அன்று இறந்தபிறகு தன் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

5.2 மேற்படி இடத்தில் தன்னால் மின் கட்டணம் முறைப்படி செலுத்தப்பட்டு வந்த மின் இணைப்புகள் 583-015-56, 432, 433, 435 ஆகிய மின் இணைப்பு மீட்டர்கள் ராஜதுரை என்பவர் சேதப்படுத்தியதுடன் மீட்டர் பாக்ஸை திருடி சென்றுவிட்டார் என்ற விபரத்தையும், மேலும் மேற்படி இடம் சம்மந்தமாக சிலர் போலி ஆவணங்களை உருவாக்கி புதிய மின் இணைப்பு பெற முயற்சி செய்துவருகிறார்கள் என்பதையும் அவர்கள் யார் என்பதையும், அது போலி ஆவணம் எனவும், அதற்கான நீதிமன்ற தீர்ப்புகளையும் இணைத்து விபரமாக 29.1.2021 அன்று ஆவணங்களை இளமின் பொறியாளர் மன்னார்குடி அவர்களை நேரில் சந்தித்து கொடுத்ததாகவும், திருவாரூர் அலுவலகத்திற்கு ஒரு செட் தரவேண்டும் எனவும், ஆகவே 2 நகல் கேட்டு கொண்டதன் பேரில் நகல் வழங்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 2 நாட்கள் கழித்து இளமின் பொறியாளர் அவர்களிடமிருந்து 29.1.2021 நாளிட்டு ஒரு கடிதம் வந்தது. க.எண். இரு பொ/இ.ப/ந.11/மன்னை/கோ.தனி அ.எண் 016/2021 நாள் 29.01.2021 என்ற அந்த கடிதத்தில் "புதிய மின் இணைப்பு வேண்டி திரு N.மாணிக்கவாசகம் த/பெ. நடேசன் பரவாக்கோட்டை என்பவர் 29.1.2021 அன்று உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் பதிவு செய்து தொகை செலுத்தி உள்ளதாகவும், இந்நிலையில் தாங்கள் மேற்படி இடத்திற்கு மின் இணைப்பு வழங்க ஆட்சேபணை தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதாகவும், மேற்கண்ட இடம் தங்களுக்கு சொந்தம் என்பதற்கு உரிய ஆவணங்கள் இக்கடிதம் கிடைத்த மூன்று தினங்களுக்குள் சமர்ப்பித்திட கோரப்படுகிறது எனவும், தவறினால் தங்கள் கடிதம் மூலம் தெரிவித்த ஆட்சேபனை எவ்வித முன் அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும் என்கிற தகவல் அன்புடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது" என்று இருந்ததாகவும், அதிர்ச்சி அடைந்த மேல்முறையீட்டாளர் கடிதத்துடன் இள மின்பொறியாளர் அவர்களை நேரில் சந்தித்து தான் புகார் மனு கொடுத்த அன்றே தனக்கு கடிதம் எழுதி உள்ளதாக கேட்டபோது கடிதம் காலையிலேயே எழுதப்பட்டு விட்டது என்றும், புகார் மனு முதன் முறையாக மாலைதான் தரப்பட்டுள்ளபோது 29.01.2021 அன்று காலையே தேவையில்லாமல் கடிதம் எழுத வேண்டிய அவசியம் என்ன? என்று கேட்டபோது தேவையில்லாமல் பேசாதீங்க சட்டக்கருத்துக்களை வாங்கிதான் செய்வோம், உங்களுக்கு கடிதம் வரும்போது விசாரணைக்கு வாங்க என்று கூறி அனுப்பியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர்.

5.4 தான் புகார் மனுவுடன் அளித்த ஆவணங்களை பரிசீலனை செய்யாமலும், மின் வாரிய சொத்தான மீட்டர் 4 திருடு போனது பற்றி தான் தகவல் தந்தும், இது குறித்த எந்த நடவடிக்கையும் எடுக்காமலும், திரு.மாணிக்கவாசகத்திற்கு (அவர் சிங்கப்பூரில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது) புதிய மின் இணைப்பு தரவேண்டுமென்ற ஒற்றை எண்ணத்தில் இள மின்பொறியாளர் அவசர கதியில் செயல்பட்டுள்ளார் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர்.

5.5 இள மின்பொறியாளர் மன்னார்குடி அவர்கள் மின் குறைதீர்ப்பாளர் சென்னை அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் க.எண்.இ.மி.பொ/இ.ப./நகர் II/கோ.தனி/ ஆ.எண். 204/2020 நாள் 7/12/2021 – 29.1.2021 அன்று மாலையே 4 மின் மீட்டர்களை ராஜதுரை திருடி சென்று விட்டார் என்று தான் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளதை

ஏற்றுக்கொள்ளும் இள மின்பொறியாளர் அவர்கள் திருவாரூர் குறைதீர் மன்றத்தில் தனது தரப்பு வாதமாய் மார்ச் 2021 கணக்கீடு மேற்கொள்ளும் சமயத்தில் தான் மேற்கண்ட 4 மின் இணைப்புக்குரிய மின் மீட்டர்கள் இல்லாதது கண்டறியப்பட்டதாக பொய்யான தகவலை தெரிவித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர்.

5.6 திருவாரூர் குறைதீர் மன்றத்தில் மேற்படி மின் இணைப்புக்குரிய மீட்டர் மற்றும் உரிய ஆவணம் தந்தால் பெயர் மாற்றம் செய்து தரப்படும் என்று சொல்லுகிறார். மின் மீட்டர்களை யார் தருவது? ஒரே இடத்தில் நீண்ட காலமாக பயன்படுத்திய தனக்கும் மின் இணைப்பு ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிப்பவருக்கும் மின் இணைப்பா? என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர்.

5.7 மின்குறைதீர்ப்பாளருக்கு எழுதிய கடிதத்தில் இளமின் பொறியாளர் அவர்கள் மேற்கண்ட மின் இணைப்புகளில் மீட்டர்கள் இல்லாமல் இருப்பது தொடர்பாக காவல்துறை ஆய்வாளர் மன்னார்குடி அவர்களிடம் 20.4.2021 மற்றும் 23.8.2021 ஆகிய தேதிகளில் கடிதம் எழுதப்பட்டு நிலுவையில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். தான் தகவல் தந்தது 29.1.2021 என்றும், எதிர்மனுதாரர் நடவடிக்கை எடுத்தது 20.04.2021 என்றும், காவல் துறைக்கு புகார் கொடுக்க 3 மாத கால அவகாசம் எடுத்துக் கொண்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர்.

5.8 இருதரப்பு ஆவணங்களையும் சரிபார்த்து மரியாதைக்குரிய அரசு கூடுதல் வழக்கறிஞர் மன்னார்குடி அவர்கள் 8.2.2021 அன்று வழங்கிய கருத்துறைப்படித்தான் 15.2.2021 அன்று திரு.மாணிக்கவாசகம் அவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர்.

5.9 தன்னுடைய 29.1.2021 கடிதத்தில் வெறும் ஆவணங்களை மட்டும் இணைக்கவில்லையென்றும், 4 மின் இணைப்பு மீட்டர்கள் திருட்டு போனதையும் குறிப்பிட்டு இருந்ததாகவும், ஆவணத்தை பரிசீலினை செய்தபோது மரியாதைக்குரிய அரசு வழக்கறிஞர் அவர்கள் இது பற்றி எந்த கருத்தும் சொல்லவில்லையா? அல்லது இளமின் பொறியாளர் அவர்கள் கேட்கவில்லையா என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர்.

5.10 மேலும் கடிதத்தில் "மேல்முறையீட்டில் தெரிவித்துள்ளவாறு எந்தவிதமான RDO ஆணைகள் அளிக்கவில்லை" என்றும், திருவாரூர் குறைதீர்மன்ற தீர்ப்பு கடிதத்தில் RDO அவர்கள் 11.2.2021 அன்று அளித்த தீர்ப்பின் ஒவ்வொரு வரியும் குறிப்பிட்டுள்ளதே தான் சமர்ப்பித்த RDO அவர்களின் தீர்ப்பின் அடிப்படையில் தான் என்றும், தன் பெயருக்கு மாற்றம் செய்ய தடையாக இருப்பதே RDO தீர்ப்புதான் என்று தீர்ப்பின் இறுதியில் சொல்லப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர். ஆகவே எதிர்மனுதாரர் அவர்கள் திருவாரூர் மின்குறைதீர் மன்றத்தில் தந்த வாக்கு மூலத்திற்கும் மின்குறைதீர்ப்பாளருக்கு எழுதிய கடிதத்திற்கும் முரண்பாடு உள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர்.

5.11 திரு. மாணிக்கவாசகம் என்பவருக்கு எப்படியாவது மின் இணைப்பு தரவேண்டுமென்று ஒற்றை இலக்கு நோக்கி பயணித்தவர்களின் கண்களுக்கு தன் பக்கம் இருந்த தர்மம், நியாயம் நீதிமன்ற தீர்ப்பு – தடையாணை எதுவும் அவர்கள் கண்களுக்கு தெரியவில்லை என்றும், மின் இணைப்பு தர தடையாக இருந்த தன் அனுபவத்தில் இருந்து வந்த மின் மீட்டர்களை ராஜதுரை மூலம் அகற்றுவது என்ற முடிவுக்கு அவர்களை கொண்டு சென்று விட்டதாக தான் கருத வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர்.

5.12 தன்னுடைய நீண்ட கால பயன்பாட்டில் இருந்த மின் இணைப்பு 583–015–56, 432, 433, 435 ஆகியவைகளுக்கு உண்டான மின் மீட்டர்களை பொருத்தி உடனடியாக மின் இணைப்பை திரும்ப தரவேண்டும் எனவும், போலி ஆவணங்களை உருவாக்கி மின் துறை அதிகாரிகளை பயன்படுத்தி தன் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிக்கும் மாணிக்கவாசகத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பை உடனடியாக துண்டிக்க வேண்டும் எனவும், காணாமல் போன மின் மீட்டர்கள் சம்மந்தமாக மின்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 திரு மாணிக்கவாசகம் த/பெ. நடேசன், நடேசன் தெரு, மன்னார்குடி என்பவர் கடந்த 27/1/2021 ல் புல எண் 3580/2D–இல் புதிய மின் இணைப்பு வேண்டி பதிவு செய்து (583012198/27.1.2021) இருந்ததாகவும், அதற்குறிய தொகையினை கடந்த 29.1.2021–இல் செலுத்தி இருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 29.1.2021 அன்று மாலை திரு தம்பி தேவேந்திரன் அவர்கள் புல எண் 3580–இல் 9200 சதர அடி தனக்கு சொந்தமானது எனவும், அதில் ஏற்கனவே இருந்த மின் இணைப்புகள் (583–015–56, 583–015–432, 583–015–433, 583–015–435) நான்கினையும் திரு ராஜதுரை என்பவர் சேத படுத்தி மீட்டர்களை திருடிச் சென்று விட்டதாக தெரிவித்து திரு.மாணிக்கவாசகம் த/பெ நடேசன், நடேசன் தெரு அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க கூடாது என ஆட்சேபனை தெரிவித்து இருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 அதன் அடிப்படையில் 29.1.2021 அன்று திரு தம்பி தேவேந்திரன் அவர்களிடம் புல எண் 3580–இல் 9200 சதுர அடி தங்களுக்கு சொந்தமானது என்பதற்கு உரிய ஆவணங்களை மூன்று தினங்களுக்குள் அளிக்க கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், 30.1.2021 அன்று திரு தம் தேவேந்திரன் அவர்கள் உயில் ஆவணத்தை அளித்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 திரு மாணிக்கவாசகம் த/பெ. நடேசன், நடேசன் தெரு, மன்னார்குடி அவர்கள் புதிய மின் இணைப்பு வேண்டி அளித்து இருந்த ஆவணங்களின் நகல்களையும், தம்பி தேவேந்திரன் அவர்கள் அளித்து இருந்த ஆவணங்களின் நகல்களையும் கடந்த 1/2/2021 அன்று திரு. ஜெய்ஷங்கர் அரசு கூடுதல் வழக்கறிஞர் / மன்னார்குடி சார்பு நீதி மன்றம் / மன்னார்குடி அவர்களிடம் அளித்து சட்ட கருத்துரை கோரப்பட்டு இருந்ததாகவும், திரு தம்பி தேவேந்திரன் அவர்கள் கடந்த 5.2.2021 அன்று புதிய மின் இணைப்பு வழங்குவதை எதிர்த்து திருவாரூர் மாவட்ட நீதி மன்றத்தில் அசல் வழக்கு எண் 09/2021 ன் படி நிலுவையில் உள்ளது என மனு அளித்ததாகவும், அதன் படியும் திரு.ஜெய்ஷங்கர் அரசு கூடுதல் வழக்கறிஞர்/ மன்னார்குடி சார்பு நீதி மன்றம் / மன்னார்குடி அவர்களிடம் அளித்து சட்ட கருத்துரை 6.2.2021 அன்று கோரப்பட்டு இருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 1.2.2021–இல் கோரப்பட்டு இருந்த சட்ட கருத்துரை தொடர்பாக திரு. ஜெய்ஷங்கர் அரசு கூடுதல் வழக்கறிஞர்/மன்னார்குடி அவர்கள் 8.2.2021–இல் வழங்கிய சட்ட கருத்துரையில் மின் இணைப்பு வழங்குவதால் மட்டும் சொத்து ஒருவருக்கு சொந்தம் ஆகாது எனவும், திரு.மாணிக்கவாசகம் அவர்களிடம் உரிய

பொறுப்பு உறுதி ஆவணம் பெற்றுக் கொண்டு மின் இணைப்பு வழங்கலாம் என சட்ட கருத்துரை வழங்கியதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேலும் 6.2.2021-இல் கோரப்பட்டு இருந்த சட்ட கருத்துரை தொடர்பாக திரு.ஜெய்ஷங்கர் அரசு கூடுதல் வழங்கறிஞர் / மன்னார்குடி/ அவர்கள் திருவாரூர் மாவட்ட நீதி மன்றத்தில் அசல் வழக்கு எண் 09/2021 என விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து இருந்தாலும், மேற்கண்ட நகரளவை எண் குறித்து, புதிய மின் இணைப்பு வழங்குவது தொடர்பாக நீதிமன்றத்தில் எந்த ஒரு வழக்கோ அல்லது தடையாணையோ இல்லாத நிலையில் மின் இணைப்பு வழங்குவதால் மட்டும் சொத்து ஒருவருக்கு சொந்தம் ஆகாது எனவும், திருமாணிக்கவாசகம் அவர்களிடம் உரிய பொறுப்பு உறுதி ஆவணம் பெற்றுக் கொண்டு மின் இணைப்பு வழங்கலாம் என சட்ட கருத்துரை வழங்கியதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 திரு ஜெய்ஷங்கர் அரசு கூடுதல் வழக்கறிஞர்/ மன்னார்குடி அவர்கள் வழங்கிய சட்ட கருத்துரையின் படியும், மேற்படி இடத்தின் வில்லங்க சான்றினை ஆய்வு செய்து மாணிக்கவாசகம் பெயரில் இருந்ததை உறுதி செய்தும், திரு.மாணிக்கவாசகம் அவர்களிடம் கடந்த 15.2.2021 அன்று உரிய பொறுப்பு உறுதி ஆவணம் பெற்றுக் கொண்டு மின் இணைப்பு (583-015-481) வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 திரு.தம்பி தேவேந்திரன் அவர்கள் கடந்த 18.2.2021 அன்று மின் இணைப்புகள் (583-015-56, 583-015- 432, 583-015-433, 583-015-435) நான்கினையும் தனது பெயரில் மாற்றம் செய்து தரக்கோரி கடிதம் அளித்ததுடன் உயில் ஆவணம் ஒன்றினை அளித்ததாகவும், பெயர் மாற்றம் செய்ய வாரிய விதிகளின்படி வரி இரசிது அல்லது குடிநீர் இரசிது அல்லது பத்திர நகல் அல்லது வட்டாச்சியர் வழங்கும் வாரிசு சான்று உடன் விண்ணப்பம் அளித்தால் பெயர் மாற்றம் செய்ய வாரிய விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மேலும் மேற்கண்ட மின் இணைப்புகளில் மீட்டர்கள் இல்லாமல் இருப்பது தொடர்பாக காவல் துறை ஆய்வாளர் / மன்னார்குடி அவர்களிடம் 20.4.2021 மற்றும் 23.8.2021 ஆகிய தேதிகளில் கடிதம் எழுதப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும், திரு.

தம்பி தேவந்திரன் அவர்கள் RDO உத்தரவு படி யாரும் உள்ளே செல்ல கூடாது என மேல்முறையிட்டில் தெரிவித்துள்ளதாகவும், அவர் 29.01.2021 மற்றும் 05.02.2021 தேதிகளில் வழங்கிய ஆட்சேபனை கடிதத்தில் வருவாய் கோட்டாச்சியர் / மன்னார்குடி அவர்கள் ஸ்தல விசாரணை மேற்கொண்டு வழக்கு நிலுவையில் உள்ளது என தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 மேலும் 10.2.2021 அன்று அளித்த கடிதத்தில் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மேற்படி இடத்தை சேத படுத்தியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க காவல்துறையிடம் பரிந்துரை செய்துள்ளதாக தெரிவித்துள்ளதாகவும், மேல்முறையீட்டில் தெரிவித்துள்ளவாறு எந்தவிதமாக RDO–இன் ஆணைகள் அளிக்கவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 மீட்டர்கள் இல்லாதது தொடர்பாக காவல்துறை வசம் புகார் அளிக்கப்பட்டுள்ளது எனவும், வாரிய விதிகளின்படி பெயர் மாற்றம் செய்ய தம்பி தேவேந்திரன் அவர்கள் உரிய ஆவணங்கள் அளிக்கவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தனது சித்தப்பா G. சிவானந்தம் எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் புல எண் 3580–இல் உள்ள 9200 கதுர அடி இடம் தனக்குச் சொந்தமானது எனவும், மேற்படி இடத்தில் உள்ள நான்கு மின் இணைப்புகள் 583–015–56, 432, 433 மற்றும் 435 ஆகியவற்றை முறைப்படி மின்கட்டணம் செலுத்தி தான் பயன்படுத்தி வந்ததாகவும், திரு ராஜதுரை என்பவர் மேற்படி மின் இணைப்களை சேதப்படுத்தி மின் அளவிகளை திருடிச் சென்றுவிட்டதாகவும், மேற்படி மின் இணைப்புகளை தனது பெயருக்கு பெயர் மாற்றம் கோரியுள்ளார்.

7.3 மின் இணைப்புகள் 583–015–56, 432, 433 மற்றும் 435 ஆகியவைகளை பெயர் மாற்றம் கோரி மனுவுடன் உயில் ஆவணம் மேல்முறையீட்டாளர்

சமர்ப்பித்துள்ளதாகவும், விதிமுறைகளின்படி தேவைப்படும் ஆவணங்களுடன் சமர்ப்பிக்கும் பட்சத்தில் பெயர் மாற்றம் செய்யப்படுமென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் மேல்முறையீட்டாளர் தனது 29.01.2021 நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய அனுபவத்தில் இருந்து வரும் மேற்படி இடம் சம்பந்தமாக ராஜதுரை என்பவர் தொந்தரவு செய்வதாக மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டு கு.எண் 07/D1PS/TVR நாள் 08.03.2019–இல் பதியப்பட்டு, குற்றவியல் நடைமுறை சட்டம் 145–இன் கீழ் நடவடிக்கையெடுக்கப்பட்டு மன்னார்குடி உட்கோட்ட நிர்வாக நீதிபதி மற்றும் வருவாய்கோட்ட அலுவலர் அவர்களால் விசாரணையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனக்கு சொந்தமானதும், அனுபவத்திலும் இருந்து வரும் சொத்தினை தனது அனுபவத்திற்கு ராஜதுரை என்பவர் தொடர்ந்து தொந்தரவு செய்து வருவதாகவும், மேற்படி மின் அளவிகளை திருடிச் சென்றுவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேலும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 145–இன் கீழ் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் சட்டத்திற்கு புறம்பாக மின் இணைப்பு பெற முயற்சிப்பதை தடுத்து நிறுத்துமாறு எதிர்மனுதாரரிடம் மனு சமர்ப்பித்துள்ளார்.

7.4 புல எண் 3580–இல் உள்ள 9200 சதுர அடி நிலப்பிரச்சனை தொடர்பாக குற்றவியல் நடைமுறைச் சட்டம் 145–இன் கீழ் வழக்கு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி வழக்கு சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மன்னார்குடி உட்கோட்ட நிர்வாக நீதிபதி மற்றும் வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ஆவணம் ந.க.986/2019/அ3 நாள் 11.02.2021–ஐ ஆய்வு செய்ய விரும்புகிறேன். மேற்படி ஆணையின் சம்பந்தபட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்னார்குடி உட்கோட்ட நிர்வாக நீதிபதி மற்றும் வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் செயல்முறைகள்*
*முன்னிலை: ச. புண்ணியகோட்டி பி.எஸ்.சி.*

*ந.க. 986/2019/அ3* *நாள் : 11.02.2021*

*பொருள்:* *குற்றவியல் நடைமுறைச்சட்டபிரிவு 145(1) – மன்னார்குடி காவல் சரகம் – 'அ' தரப்பினர் தம்பிதேவேந்திரன் த/பெ ராதாகிருஷ்ணன் மற்றும் 'ஆ' தரப்பினர் ராஜதுரை த/பெ கோவிந்தசாமி மற்றும் 2 நபர்களிடையே*

மன்னார்குடி வட்டம் மற்றும் நகரம், நடேசன் தெரு வார்டு – 1, பிளாக் எண் 56 T.S No. 3580 பூராவிஸ்தீர்ணம் 31485–ல் சதுர அடியில் 9200 ச.அ. நிலம் குறித்து இருதரப்பினரிடையே தொடர்ந்து வரும் நிலப்பிரச்சனை தொடர்பாக சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படி வாய்ப்புள்ளதாக தெரிவித்து குற்றவியல் நடைமுறைசட்டம் 145–ன் கீழ் பரவாக்கோடை காவல் ஆய்வாளரால் தாக்கல் செய்த மனு – தொடர்பாக

பார்வை: 1.மன்னார்குடி காவல் நிலைய கு.எண்.07/D1PS/TVR நாள் 08.03.2019

ஆணை:

மன்னார்குடி வட்டம், பைங்காட்டூர் கிராமம், அண்ணாநகர் என்ற முகவரியை சேர்ந்த தம்பிதேவேந்திரன் த/பெ. ராதாகிருஷ்ணன் என்கிற 'அ' தரப்பினருக்கும் மன்னார்குடி நகரம், 52, நடராஜபிள்ளை தெரு என்ற முகவரியை சேர்ந்த ராஜதுரை த/பெ கோவிந்தசாமி, மற்றும் மன்னார்கடி நகரம், 66, ருக்மணிபாளையம் ரோடு என்ற முகவரியில் வசித்து வரும் சிவானந்தம் மகன்களான வேலவன், சிங்கராவேலன் என்கிற 'ஆ' தரப்பினருக்கும் இடையே மன்னார்குடி வட்டம் மற்றும் நகரம், நடேசன் தெரு வார்டு –1, பிளாக் எண் 56 T.S. No.3580 பூரா விஸ்தீர்ணம் 31485 –ல் சதுர அடியில் 9200 ச.அ நிலம் தொடர்பாக இருதரப்பினரிடையே தொடர்ந்து வரும் நிலப்பிரச்சனை தொடர்பாக சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவித்து குற்றவியல் நடைமுறைசட்டம் 145–ன் கீழ் நடவடிக்கை எடுக்க கோரி பார்வையில் காணும் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி சொத்து தொடர்பான உரிமையினை மேற்படி நபர்கள் கோரவில்லை. மேற்படி இடத்தில் உள்ள கடையினை வாடகைக்கு எடுத்து நடத்திடவும், மேற்படி இடத்தின் வாடகை அனுபவ உரிமையினை இரு தரப்பினராலும் கோரப்பட்டுள்ளது. ஆனால் இரு தரப்பினரும் போதுமான ஆதார ஆவணங்களை ஆஜர் படுத்தவில்லை. உரிமை பாத்தியம் தொடர்பாக ஏற்கனவே வழக்கு எண். 41/1988, 100/1990 மற்றும் 4/1995 வழக்கு எண் ஆகியவற்றில் பல்வேறு தரப்பினரால் தொடரப்பட்ட வழக்குகள் தீர்ப்புகள் வழங்கப்பட்ட நிலையில், மீண்டும் தற்போது மேற்படி தாவா சொத்து தொடர்பாக 'அ' மற்றும் 'ஆ' தரப்பினால் பிரச்சனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு எண் 155/2018, மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு எண் 25/2019, மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் 29/2019, திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு எண் 09/2021 ஆகிய வழக்குகள் விசாரணை நிலுவையில் உள்ளதால், நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்பின் அடிப்படையிலும் இரு தரப்பினரும் பரிகாரம் பெற்றுக்கொள்ளும்படி தெரிவிக்கப்படுகிறது. எனவே மேற்படி தாவா சொத்து மீதான வாடகை உரிமையினை மாண்புமிகு நீதிமன்றங்கள் உறுதி செய்து தீர்ப்பு வழங்கும் வரை சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் ('அ' மற்றும் 'ஆ தரப்பினர்) மேற்படி தாவா சொத்தில் நுழையவோ, ஆக்கிரமிக்கவோ, வேறு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது என்றும், மேற்படி இடத்தில் ஏற்கனவே இருந்த நிலையிலேயே பராமரிக்கப்பட வேண்டும் (status quo to be maintained) எனவும் உத்திரவிடப்படுகிறது. மேற்படி தாவா சொத்தில் இரு தரப்பினரும் நுழையாமல் இருக்க

*தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மன்னார்குடி நகர காவல் நிலைய காவல் ஆய்வாளருக்கு இதன் மூலம் தெரிவித்து ஆணையிடப்படுகிறது."*

மேற்கண்ட ஆணையின்படி, தாவா சொத்தில் எந்த தரப்பினரும் நுழையவோ, ஆக்கிரமிக்கவோ, வேறு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது என்றும், மேற்படி இடத்தில் ஏற்கனவே இருந்த நிலையிலேயே பராமரிக்கப்பட வேண்டும் (status co to be maintained) எனவும் உத்திரவிடப்பட்டுள்ளது அறிய முடிகிறது. இது சம்பந்தமாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் உள்ள விதி 17(4)–ஐ ஆராய விரும்புகிறேன்.

*"17(4):*
*(a) xxxxx*
*(b) xxxxx*
*(c) xxxxx*
*(d) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்கக அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது."*

எனவே, மேல்முறையீட்டாளரின் புகார் சம்பந்தப்பட்ட சொத்து தொடர்பான பிரச்சனையில் மன்னார்குடி உட்கோட்ட நிர்வாக நீதிபதி மற்றும் வருவாய் கோட்ட அலுவலர் அவர்கள், மேற்படி இடத்தில் (9200 ச.அடி புல எண் 3580) எந்த தரப்பினரும் நுழையவோ, ஆக்கிரமிக்கவோ, வேறு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது என்றும், ஏற்கனவே இருந்த நிலையிலேயே பராமரிக்கப்பட வேண்டுமென (status quo to be maintained) உத்திரவிடப்பட்டுள்ளதால் மேற்கண்ட விதி 17(4)(d)–இன்படி மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

## 8.0 பகுப்பாய்வு:

8.1 மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரருக்கு அளித்துள்ள தன்னுடைய 29.01.2021 நாளிட்ட புகார் மனுவில் மேற்படி இடம் தனது அனுபவத்தில் உள்ளதாகவும், மன்னார்குடி உட்கோட்ட நிர்வாக நீதிபதி மற்றும் வருவாய் கோட்ட அலுவலரிடம் வழக்கு நிலுவையில் இருந்து வருவதாகவும், போலி ஆவணங்கள் தயாரித்து புதிய மின் இணைப்பு பெற சிலர் முயற்சிப்பதாகவும் தெரிவித்துள்ள நிலையில், உரிய ஆவணங்கள் இல்லாமல் பொறுப்பு உறுதி ஆவணம் பெற்றுக் கொண்டு புதிய மின் இணைப்பு எண் 583-015-481 வழங்கப்பட்டுள்ளது தவறான நடைமுறையாகும்.

மேலும் மன்னார்குடி உட்கோட்ட நிர்வாக நீதிபதி மற்றும் வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் ஆணை 11.02.2021–இல் (status quo to be maintained) வழங்கிய பிறகு 15.02.2021–இல் புதிய மின் இணைப்பு எண் 481 வழங்கப்பட்டுள்ளது. இது போன்று வழக்கு நிலுவையில் உள்ளதாக தெரிந்தும், 11.02.2021 அன்றே ஆணை வழங்கப்பட்ட பின்பு 15.02.2021 அன்று புதிய மின் இணைப்பு வழங்கியுள்ளது புதிய மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்தவருக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளது கண்டிக்கத்தக்கது.

**9.0 <u>முடிவுரை</u>:**

9.1 பத்தி 7.0–இல் உள்ள தீர்வின்படி, மன்னார்குடி உட்கோட்ட நிர்வாக நீதிபதி மற்றும் வருவாய் கோட்ட அலுவலர் அவர்கள் புல எண் 3580–இல் உள்ள 9200 ச.அடி நிலத்தை ஏற்கனவே இருந்த நிலையிலேயே பராமரிக்கப்பட வேண்டுமேன (status quo to be maintained) உத்திரவிடப்பட்டுள்ள நிலையில், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார ஒழுங்குமுறை விதி 17(4)(d)–ன்படி மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

9.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 82/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்:

1. திரு. இரா. தம்பி தேவேந்திரன்,
த/பெ. இராதாகிருஷ்ணன்,
அண்ணா நகர், பைங்காட்டூர்,
மன்னார்குடி – 614717.

2. இள மின் பொறியாளர்/ இ.கா./நகர் 2/மன்னார்குடி,
திருவாரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டவுன் 51, சன்ஜீவி தெரு,
மன்னார்குடி – 614 001.

3. மேற்பார்வை பொறியாளர், – By email
திருவாரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
73, துர்காலயா ரோடு, திருவாரூர் – 610 002.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.